4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(அ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981 (ஆ. இ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

ஆ. நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. தகவல் கோரல்

வேதாரண்யம் கரையோரம் பத்து பிணங்கள் ஒதுங்கி இருப்பதாகக் வந்துள்ள செய்தி.

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நந்த விவாதத்திலே நான் பங்கெடுத்துக் கொள்ளாவிட்டாலும் கூட இன்று காலையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற தந்தியிலே ஒரு அதிர்ச்சியான வருந்தத்தக்க செய்தி வந்திருக்கின்றது. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம் முன்னவர் அவர்கள் அதை கவனிக்க வேண்டும் என்பதற்காகத் தான். இந்தத் தந்தியினை வேதாரண்யத்திலே இருந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

"About 16 dead bodies of assassinated Tamillians of Ceylon ashored in vedaranyam to Point Calemere sea shore. என்று இந்தத் தந்தியிலே காணப்படுகிறது. இலங்கையிலே வாழ்கிற தமிழர்களிலே 10 பேர் கொலை செய்யப்பட்டு அவர்களுடைய உடல்கள்